# பொய்ப்பிரச்சாரங்களை

# முறியடித்து!

# முன்னேறுவோம்!!

எமது பல்கலைக்கழகத்தின் சகமாணவனும் எம் இனிய நண்பனுமான விஜிதரன் கடத்தப்பட்டதை எதிர்த்து நாம் நடத்திவந்த சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் 28-11-86 அன்று பத்தாவது நாளுடன் முடித்து வைக்கப்பட்டது. விஜிதரன் விடுவிக்கப்படாமலேயே எமது உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டது எமது மாணவர்கள் இறந்துவிடக்கூடாதே என்பதற்காகவே. எமது உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடுமாறு கோரியவர்கள், தவிர்ந்த பலருக்கும் வியப்பினை ஊட்டியிருக்கலாம். இது தொடர்பாக நாம் 29-11-86 அன்று பத்திரிகையில் வெளியிட்டிருந்த அறிக்கை எமது நிலைப்பாட்டை ஓரளவு தெளிவுபடுத்தியிருக்கும். ஆயினும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்த உணர்ச்சி மிகுந்த நாட்களில் எமது போராட்டத்திற்கு ஆதரவாகவும் எதிராகவும் வெளியிடப்பட்ட பல்வேறு பிரசுரங்களில் எழுப்பப்பட்ட கேள்விகள் சந்தேகங்கள் என்பவற்றிற்குப் பதிலளிக்கு முகமாகவும் 28.11.86 காலை பத்திரிகையில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்திடம் தாம் கையளித்த உடல்பாட்டை வாபஸ் வாங்கிவிட்டதாகப் பகிரங்கமாகத் தெரிவித்திருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அன்று மாலை பகிரங்கமாகத் தமது உத்தியோகபூர்வ பிரசுரத்தில் அவற்றை ஏற்றுக்கொண்டுள்ளதாக அறிவித்ததைத் தொடர்ந்து நாம் ஏன் எமது உண்ணாவிரதப் போராட்டத்தை முடித்துவைத்தோம், என்பதையும் தெளிவுபடுத்து முகமாகவும்; எமது கருத்தை விபரமாக மக்கள் முன் வைப்பது அவசியம் எனக் கருதுகிறோம்.

... நண்பன் விஜிதரன் கடத்தப்பட்ட சம்பவத்தை எதிர்த்துக் கிளர்ந்தெழுந்த எமது மாணவர்களை ஐக்கியப்படுத்தி, இந்தப் போராட்டத்தை ஒரு ஒழுங்குபடுத்திய வடிவத்தில் மேற்கொள்வதற்கான அனைத்து முயற்சிகளையும் எமது அமைப்புக்குழு மேற்கொண்டது. எமது நண்பன் விஜிதரன் கடத்தப்பட்டது யாழ்ப்பாணமாக இருந்ததால் இது திட்டவட்டமாக ஏதாவது ஒரு விடுதலை இயக்கத்தாலேயே நடத்தப்பட்டிருக்க வேண்டும். என்பது பல்வேறு காரணகாரிய தொடர்புகளின் காரணமாக நாம் முடிவுகட்டினோம். ஆயிரக் கணக்கான மக்களைப் பலிகொடுத்து பல நூறு இளம் போராளிகளின் தியாகத்திற்கு மத்தியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் எமது தேசத்தின் விடுதலைப் போராட்டத்தை நாம் மறந்துவிடவில்லை. அதேவேளை அந்தப் போராட்டத்தின் இடையிடையே ஏற்பட்ட கறைபடிந்த சம்பவங்களையும் நாம் மறந்துவிடவில்லை. 'உருக்கமான வேண்டுகோள்' 'புனித' இயக்கங்களுக்கு ஒரு பணிவான வேண்டுகோள், என்ற அறிவிப்புடன் பத்திரிகைகளில் வெளிவந்து கொண்டிருந்த நெஞ்சையுருக்கும் விளம்பரங்கள், இன்னும் மின்னும் நாளுக்குநாள் கண்டும் கேட்டும் மனம் வெதும்புகின்ற பல்வேறு நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றினது தொடர்ச்சியாகவே நாம் இந்த விஜிதரனின் பிரச்சனைகளைப் பார்த்தோம், விஜிதரனை விடுவிக்கக்கோரி நாம் போராடினால் விஜிதரன் கிடைத்துவிடலாம், சிலவேளை விஜிதரனின் தகப்பனார் பத்திரிகையில் ஒரு 'உருக்கமான வேண்டுகோளை' விடுவதன்மூலம் அவனைப் பெற்றுவிடலாம். ஆனால் எமது மக்களின் விடுதலைப் போராட்டம் முன்னேறிக்கொண்டிருக்கும் இந்நிலையில் இப்படி உருக்கமான வேண்டுகோள்கள் வேவைதானா? இதற்கு ஒரு முடிவு இல்லையா? என்ற அடிப்படையில் தான் நாம் இயக்கங்களை நோக்கி சில அடிப்படையிலான கோரிக்கைகளை, ஜனநாயகக் கோரிக்கைகளை கோர்த்து வைத்து. எமது போராட்டத்தைத் தொடர்கிறோம். துரோகிகள் காட்டிக்கொடுப்போர் போன்றவர்களைக் கைதுசெய்து மின்கம்பத் தண்டனை வழங்கிய காலங்களில் எல்லாம் அவர்களது குற்றங்கள் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டுத் தண்டனை வழங்கிய விடுதலை ஸ்தாபனம் உரிமை கோரிய ஆரோக்கியமான சூழல் நிலவியது. ஒரு காலத்தில் எமது போராட்டம் வளர்ந்துகொண்டிருந்த அந்த நேரத்தில், (இவற்றில் சில தவறுகளும் நேர்ந்துள்ளபொழுதிலும், பொதுப்படையாக அந்தப்போக்கில் ஒரு நேர்மை இருந்தது) இருந்த இந்த ஆரோக்கியமான அணுகுமுறை கைவிடப்பட்டு 'இனந்தெரியாத நபர்களால்' 'ஆயுதமேந்திய இளைஞர்களால்' என்ற விகத்திலேயே அடையாளம் காணப்படும் ஒரு நிலை தொடங்கியது. இந்தப்போக்கு தனிப்பட்ட பழிவாங்கல், அரசியல் பழிவாங்கல் என்று பல்வேறு காரணங்களுக்காகவும் எமது பூமியில் வளரத் தொடங்கியது. 'பெடியள் பிளைவிடாங்கள்' அரசாங்கம்தான் பொய் சொல்லுது என்று பாமர மக்களும் கூட இதயபூர்வமாக நம்பிய ஒரு புனிதமான இயக்க வரலாறு. எம்மத்தியிலிருந்தது. இன்று அது மறைந்து எம்மக்கள் மத்தியிலும் பிற ஜனநாயக சக்திகள் மத்தியிலும் நம்பிக்கையீனத்தையும் விரக்தியையும் ஏற்படுத்தியது யாழ்ப்பாணத்தில் அதுவும் இராணுவம் பூரண கட்டுப்பாட்டிலிருக்கும் ஒரு பிரதேசத்தில் ஒரு மாணவன் கடத்தப்படுகிறான் என்றால் அது நமது போராட்டத்திற்கும் போராடுகிற இயக்கங்களுக்கும் ஏன் மக்களுக்கும் அவமானம் தரும் ஒரு விசயம் இல்லையா? இந்த நிலை எமது மண்ணில் தொடரத்தான் வேண்டுமா? இப்படிப்பட்ட ஒரு நிலை தொடர்வதை அனுமதிப்போமானால் எமது போராட்டம் உண்மையில் நாம் எதிர்பார்க்கும் வெற்றியை மக்களுக்கு ஜனநாயகமும், சுதந்திரமும் வழங்குகின்ற ஒரு விடுதலை அடைந்த தமிழீழத்தைத் தரும் என எப்படி நம்பலாம்? எனவே இதை நாம் அனுமதிக்கக் கூடாது. இந்தப்போக்கை மேலும் வளர விடக்கூடாது. இதை [illegible] வேண்டும் என்ற அடிப்படையில்தான் நாம் சில அடிப்படையான ஜனநாயகக் கோரிக்கை

எழுத்து. சுதந்திரம், பேச்சு சுதந்திரம் மற்றும் அரசியல் சுதந்திரம் ஆகியன மறுக்கப்படக்கூடாது, ... ணங்களுக்காகப் பழிவாங்கப்படக்கூடாது என்பன உள்ளிட்ட அடிப்படை ஜனநாயகக் கோரிக்கைகளையும் சேர்த்து நாம் இயக்கங்களை நோக்கி வெளிப்படையாக வைத்தோம் அராஜக நடவடிக்கைகள் ஒழியவேண்டும். மக்களுக்கு ஜனநாயக உரிமைகள் வழங்கப்படவேண்டும். என்பதனையும் நாம் கோஷித்தோம் இவைகள் மிகச்சரியானவை, மிக அடிப்படையானவை; ஒவ்வொரு பொதுமகனுக்கும் உரிய உரிமைகளை இன்னும் நாம் திட்டவட்டமாக அறிவித்திருந்தோம்; எமது போராட்டம் எந்தவொரு இயக்கத்திற்கோ; அதன் அரசியல் நடவடிக்கைகட்கோ எதிரானதல்ல; எமது போராட்டம் இந்த தேசத்தின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரானதல்ல என்றும் நாம் நடத்தும் போராட்டம் மக்களின் ஜனநாயக அரசியல் உரிமைகளையும் கோரி நடாத்தப்படுகிற போராட்டமாகையால் இது எல்லா விடுதலை இயக்கங்களாலும் அங்கீகரிக்கப்படும் என எதிர்பார்த்தோம். நாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினோம்.. எமது போராட்டம் தேசத்தின் விடுதலைக்கான போராட்டத்திற்கு எதிரானதல்ல; மாறாக அதை மேலும் பலப்படுத்தும் விதத்தில் அதைச் சரியாக நெறிப்படுத்தும் விதத்தில் மக்களிடையே விழிப்புணர்வை ஊட்டும், அவர்களிடையே ஐக்கியத்தை வலுப்படுத்தும் என்று, ஆனால் எமக்கு, எமது போராட்டம் வளர வளர ஒவ்வொன்றாக எமக்கு ஆதரவும், ஒத்துழைப்பும் தரத் தொடங்கின. சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் தொடங்குகையில் நாம் இயக்கங்களுக்குச் சமர்ப்பித்த கோரிக்கைகளைத் (விஜிதரன் தொடர்பானவை தவிர்ந்த) தமிழீழ விடுதலைப் புலிகளைத் தவிர்ந்த ஏனைய இயக்கங்கள் பூரணமாக ஏற்றுக் கொண்டிருந்தன.

1. கடத்திச்செல்லப்பட்ட எங்கள் மாணவன் விஜிதரன் எந்தவித நிபந்தனையும் இன்றி விடுதலை செய்யப்பட வேண்டும்.

2. மருத்துவ பீட மாணவன் கேசவன் தாக்கப்பட்டமைக்கான காரணத்தைப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும்.

3. அரசியல் காரணங்கள் என்ற போர்வையில் மாணவர்கள் தாக்கப்படுதல் நிறுத்தப்பட வேண்டும்.

4. பல்கலைக்கழக மாணவர்கள், ஊழியர்கள, விரிவுரையாளர்கள் தொடர்பான எந்தப் பிரச்சினையும் நிர்வாகத்தினூடாகவே அணுகப்படவேண்டும்.

5. எமது போராட்ட உச்சக்கட்டமான சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை எவரும் இடையில் குழப்பக்கூடாது.

இக் கோரிக்கைகளுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தந்த பதில்கள் கீழ் உள்ளன: இப்பதில்கள் எமது கோரிக்கைகளுக்கான கொள்கையளவில் உடன்படக் கூடியதான பதில்களையே தந்திருந்தது. இதில் பல விடயங்கள் முழுமையாக உடன்படமுடியாத பாதகமான அம்சங்களைக் கொண்டுள்ளன.

1. பல்கலைக் கழகத்தில் நடந்த உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட சகலரதும் பாதுகாப்பிற்கு உறுதியளிக்கிறோம்.

2. கேசவன் தாக்கப்பட்டது அரசியற் காரணமென்பதை மருத்துவ பீட மாணவர்கட்குக் கொடுக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. வேண்டுமாயின் எழுத்துருவில் அதன் பிரதி சமர்ப்பிக்கப்படும் (மருத்துவ பீட மாணவர்கள் மறுத்துள்ளனர்)

3. பல்கலைக்கழக மாணவர் ஒருவர் வெளியே கைதுசெய்யப்பட்டால் அதுபற்றி கூடிய விரைவில் பல்கலைக் கழக நிர்வாகத்துக்கு அறிவிக்கப்படும்.

4. பல்கலைக்கழக வளவிற்குள் முன்வைக்கப்படும் சித்தாந்த ரீதியான எந்தக் கருத்திற்காகவும் பல்கலைக்கழக மாணவரெவருக்கும் எதிராக வெளியே நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது. பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்புக்கள் மூலம் மாணவர்களது கருத்துக்கள், விமர்சனங்கள் என்பவற்றை வெளியிடவும்.

5. மாணவர்களது வேண்டுகோளுக்கு மட்டுமன்றி எம்மீது சுமத்தப்பட்ட தப்பபிப்பிராயத்தை நீக்குவதற்காகவும் விஜிதரனைத் தேடுவதில் முழுமூச்சாக ஈடுபடுவோம்.

ஆயினும் தமிழீழ விடுதலைப் புலிகள் இந்த ஐந்து தீர்மானங்களையும் பகிரங்கமாக மக்கள் முன் வைத்திருப்பதனை அடிப்படையாகக் கொண்டு எமது உண்ணாவிரதப் போராளிகளுக்கும் எமது மாணவர்கட்கும் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பினூடாகப் போராடவும் பாதுகாப்பாக இருக்கவும் வழங்கப்பட்டுள்ள உரிமையை அடிப்படையாகக் கொண்டு எமது உண்ணாவிதரப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தோம். ஆயினும் விஜதரனின் விடுதலைக்காக நாம் தொடர்ந்து போராடுவது தவிர்க்கமுடியாததாக உள்ளது. மேலும் வெகுஜன ஸ்தாபனங்களால் முன்வைக்கப்பட்ட இரண்டு கோரிக்கைகள் தமிழீழ விடுதலைப் புலிகளை அரசியல் அனாதைகளாக்கி விடுமெனவும், அவை எம்மை யாரோ தீயசக்திகள் வழிகாட்டிச் செல்வதை உணர்த்துவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. நாம் ஆரம்பத்திலிருந்தே எந்த விடுதலை இயக்கத்திற்கும் எதிரானது அல்ல எமது போராட்டம் என்று தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம். எமது போராட்டம் எந்த ஸ்தாபனத்தையும் அரசியல் அனாதைகளாக்கும் நோக்குடன் நடாத்தப்படுவதை நாம் விரும்பவும் இல்லை. ஆனால் தமிழீழ விடுதலைப் புலிகள் பல்கலைக்கழக மாணவர்களாகிய எம்மை நோக்கி இக் குற்றச்சாட்டை சுமத்தியிருப்பதால் நாம் அதைத்

தெளிவுபடுத்த வேண்டியவர்களாக உள்ளோம். வெகுஜன ஸ்தாபனங்களால் வைக்கப்பட்ட மேலதிக இரண்டு கோரிக்கைகள் வருமாறு:-

1. மக்களுக்கு எழுத்து, பேச்சு, கருத்து, பத்திரிகைச் சுதந்திரம் வேண்டும்

2. மக்களுக்கு விரும்பிய அரசியல் ஸ்தாபனங்களில் இருக்கவோ அரசியல் நடத்தவோ சுதந்திரம் வேண்டும்.

இந்த இரண்டு கோரிக்கைகளும் எந்த விதத்திலும் பிழையானவையோ மக்களுக்கு எதிரானவையோ அல்ல. மாறாக மக்களின் ஜனநாயக உரிமைகளே இவை; இக் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளதனாலேயே நாம் தீய சக்திகளுடன் உறவு கொண்டுள்ளோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது இதைவிட இவ்வுரிமைகளை வழங்குவதால் ஒரு ஸ்தாபனம் எப்படி அரசியல் அனுதைகளாகிவிட முடியும். நாம் இன்னமும் சரியானவையாக மிக மிக அவசிய மானவையாக கருதுகிறோம். மேலும் ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராகநடை பெற்றுக் கொண்டிருக்கும் விடுதலைப்போராட்டத்தை எந்த வகையிலும் இது குழப்பாது. மாறாகப் பலப்படுத்துவதாகவே அமையும் என நாம் உறுதியாக நம்புறோம்.

எம்மை நோக்கிய சந்தேகங்களை
1. உண்மை நிலையை உணர்ந்த யாழ். மத்திய கல்லூரி மாணவர்கள்
2. சிந்திக்கத் தொடங்கிவிட்டார் பல்கலைக்கழக மாணவர்கள்
3. சுன்னாகம் இளம் விவசாயிகள் கழகம்
4. மனித நேயம் கொண்ட பல்கலைக்கழக மாணவர்கள்

ஆகியோர் வெளியிட்ட துண்டுப்பிரசுரங்கள் கொண்டிருந்தன. அந்தச் சந்தேகங்களை பொதுவாக பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்:-

1. விஜிதரன் என்ன வகையில் ஏனைய மாணவர்களிடமிருந்து வித்தியாசப்பட்டவர்
2. ஸ்ரீலங்கா பல்கலைக்கழகத்திற்கு சில மாணவர்கள் கல்வி கற்கப் போகவேண்டுமென முடிவெடுத்தது.
3. எமது போராட்டம் வடக்கையும், கிழக்கையும் பிரித்து விடுதலைப் போராட்டத்தை திசைதிருப்புகிறது.
4. மத்திய கல்லூரி மாணவன் விபுலானந்தன் சுடப்பட்டதை கணக்கில் எடுக்கவில்லை.
5. இந்திய அரசின் ஆயுதப் பறிப்பு சம்பந்தமாக மௌனம் சாதித்தது.
6. இந்திய மாநில அரசை எதிர்த்தும் புலிகள் தலைவர் பிரபாகரனை ஆதரித்தும் நடந்த ஊர்வலத்தன்று திட்டமிட்ட படி நாமும் ஊர்வலத்தை நடத்தி விடுதலைப் போராட்டத்தில் அக்கறை இல்லையெனக் காட்டியது.
7. தீயசக்திகளின் வலையில் விழுந்து திசைமாறியது.

இவற்றில் பல குற்றச்சாட்டுக்களுக்கான விளங்கங்களை பலவழிகளில் பல தடவைகளில் நாம் ஏற்கனவே கூறியிருந்தோம். எனினும் மீண்டும் ...

முதலாவது விஜிதரன் எந்த விதத்தில் ஏனைய மாணவர்களிலிருந்து வித்தியாசமானவர்? அவருக்காக ஏன் போராட வேண்டும். என்ற விடயம் விஜி ஏனைய மாணவர்களிலிருந்து வித்தியாசமானவன் என்றால் மட்டும் தான் நாம் போராட வேண்டுமா? தனியொரு மாணவனுடைய உரிமை மறுக்கப்படும் பொழுது அதற்கெதிராக நாம் போராட வேண்டும் என்பதே எமது நிலை வித்தியாசமானவர்களுக்காக மட்டும் தான் நாம் இப்படிப் போராட வேண்டும் என நினைக்கவில்லை மேலும் விஜி தனது சுயநலனுக்காக பல்வேறு இயக்கப் போர்வைக்குள் இருந்து செயல்பட்டான் என சுன்னாகம் இளம் விவசாயிகள் கழகம் குற்றஞ் சுமத்துகிறது. இப்படி அவன் ஒருபோதும் இருந்ததில்லை. இது போராட்டத்தை திசை திருப்பும் நோக்கில் கூறப்பட்ட ஆதாரமற்ற அபாண்டமே ஆகும்.

இரண்டாவது சில மாணவர்கள் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் ஸ்ரீலங்காப் பல்கலைக்கழகத்திற்கு தாம் மாறிச் செல்வது என எடுத்த முடிவையும் இம் முடிவை நிராகரித்த அமைப்புக்குழுவையும் சம்பந்தப்படுத்தி தேச விடுதலைப் போராட்டத்திற்கு எதிரானவர்களெனக் குற்றம் சாட்டப்பட்டது. இது உண்மையை மறுக்கும் செய்கையாகும். அராஜகவாதிகளின் இயலாமையின் வெளிப்பாடாகும்.

மூன்றாவது எமது போராட்டம் விடுதலைப் போராட்டத்தை திசைதிருப்புகிறதென்பதை விஜிதரன் மட்டக்களப்பு மாணவன் என்பதால் இது வடக்கையும், கிழக்கையும் பிரிப்பதாக செயல்படுகிறதாம் இது உண்மையா! மாணவர்களது உரிமைக்காக குரல் கொடுப்பதை இப்படி பேதப்படுத்திக் காட்டுவது எமது போராட்டத்தை மழுங்கடிக்கும் தந்திரோபாய நடவடிக்கையே. தவிர வேறல்ல. எங்களைப் பொறுத்தளவில் இந்தப் போராட்டத்தை நாம் முன்னெடுத்தமையே பிரதேச ஐக்கியத்தை மேலும் வலுப்படுத்தி வளர்த்துள்ளது. இன்னும் வளரும் எனவும் நம்புகிறோம்.

நாலாவது மத்திய கல்லூரி மாணவரை விவகாரம். ஸ்ரீலங்கா அரசின் அனைத்து பாசிச நடவடிக்கைகளையும் எதிர்த்து தமிழீழ மக்களின் சொந்த அரசு நிறுவப்படுவதை நாம் தொடர்ந்து உறுதியாக ஆதரித்து வருகின்றோம். எம்மாலான பங்களிப்புகளையும் வழங்கத் தயாராகயிருக்கின்றோம். எமது வரலாறு இதை உணர்த்தும் விபுலானந்தன் கொலையை எதிர்த்து நாம் நடத்திய பகிஷ்கரிப்புப் போராட்டத்தை மறந்து நாம் அதை அங்கீகரித்ததாகக் கூறுவது அற்பத்தன விஷயம். மேலும் விஜிக்கும் விபுலானந்தனுக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. இராணுவத்தால் சுடப்பட்ட விபுலானந்தன் போன்றவர்களுக்காகப் போராடுவதற்காக இன்றைக்கு ஆயிரம் தலைவர்கள் எழுந்துவிட்டார்கள். ஆனால் விஜிதரன் போன்று மௌனமாக மறைக்கப்பட்டவர்களின் கதைகளுக்காக குரல் எழுப்ப யாரும் முன்வரவில்லை. அராஜகத்தின் கோரப்பற்கள் இன்று நியாயத்தின் குரல் வளையைக் குதறுகின்றன.

ஐந்தாவது இந்திய அரசின் நடவடிக்கை தொடர்பாக நாம் எதையும் கூறவில்லை என்பது, எமது மாணவர்களின் முழுச்சக்தியையும் திரட்டி விஜிதரன் போராட்டத்தில் குவித்திருந்தமை காரணமாக எமது பத்திரிகையில் வந்த எமது அறிக்கை பலரின் கண்களில் படவில்லைப்போலும்! இப்போதும் சொல்லுகிறோம் இந்திய அரசின் நடவடிக்கைகளுக்கு எதிராக நாம் தொடர்ந்தும் போராடுவோம்.

ஆறுவது பிரபாகரனின் உண்ணாவிரதத்தை ஆதரித்து நடந்த ஊர்வலத்தன்று நாமும் ஊர்வலம் நடத்தியது இங்கு விடுதலைப்புலிகளின் ஊர்வலத்துக்கு முன்னமே நாம் ஊர்வலம் நடத்துவதென பத்திரிகைக்கு அறிவித்து விட்டோம். ஆனால் மறுநாள் விடுதலைப்புலிகள் ஊர்வலம் நடத்துவதாக அறிந்ததும் நாம் அவர்களுக்கு கடிதம் ஒன்று கொடுத்தோம். அந்தக் கடிதத்தில் நாம் முதலில் ஒழுங்கு செய்த காரணத்தால் எமக்கு ஆதரவு தரும்படி மறுநாள் இருவரும் இணைந்து நடத்துவோம் என்றும் குறிப்பிட்டிருந்தோம். இன்றைவரைக்கும் அந்தக் கடிதத்திற்கு பதில் வந்து சேரவில்லை. ஆனால் இதை வைத்துக் கொண்டே விடுதலைப் போராட்டத்தில் அக்கறையில்லை என்று பச்சோந்திகள் கூறுகிறார்கள் இது வேண்டுமென்றே எம்மைப்பற்றிக் கூறும் அவதூறாகவே நாம் கருதுகிறோம்.

ஏழாவதாக ஆனால் முக்கியமானதாக எம்மைப்பற்றிக் குறிப்பிடப்படும் குற்றச்சாட்டு நாம் தீயசக்திகளின் வலையில் விழுந்து விட்டோமாம்.

உண்மையில் எமக்குப் புரியவில்லை யார் அந்த தீயசக்திகள்; எமது குரல் தீயசக்திகளின் குரலாகவா ஒலிக்கிறது; எமது போராட்டம் தீய சக்திகளின் போராட்டமாகவா இருக்கிறது; விஜிதரனுக்காகவும் மாணவர் உரிமைக்காகவும் மக்கள் ஜனநாயகத்துக்காகவும் ஒலிக்கும் எமது குரல்களில் என்ன தீமை இருக்கிறது; மாணவர்களுக்கும் ஜனநாயக உரிமைகள் வேண்டுமென்று கூறுவது தீமையல்ல நன்மையே: உரிமை மறுக்கப்பட்ட மந்தைகளாக எந்த மக்கள் கூட்டமும் வாழ்க்கை நடத்த முடியாது. எமது சொந்த உரிமையை நாம் கேட்பதை ஏன் தீமை என்று சொல்லுகிறார்களோ தெரியவில்லை. அப்படியானால் நல்ல சக்திகள் யார்? உரிமையை மறுப்பவர்களா எமக்குப் புரியவேயில்லை தீயசக்திகளின் வலைபற்றிச் சொல்லுபவர்கள் அந்த சக்திகள் யார்; அவர்களின் கருத்து எப்படித் தீமையானது. எப்படி வலை விரிக்கிறார்கள் என்று தெளிவாகச் சொன்னால் எமக்கு அது உதவியாக இருக்கும்.

இதைவிட நாம் நடத்திய ஊர்வல முடிவில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசுவதற்கு எல்லா இயக்கங்களுக்கும் அழைப்பு விடுத்திருந்தோம் ஆனால் EPRLF மட்டுமே கலந்து கொண்டது. இது அவ்வியக்கத்தின் அரசியல் மேடையாகப் பயன்படுத்தப்பட்டமை போன்ற தப்பபிப்பிராயத்தை ஏற்படுத்தியிருக்கலாம். இதற்கு நாம் எவ்வகையிலும் பொறுப்பல்ல மேலும் அவர்களும் மொத்தமான அராஜகத்தைக் கண்டிக்காமல் குறிப்பிட்ட சிலவற்றைக் கண்டித்தமையையும் நாம் ஏற்கவில்லை.

## இறுதியாக ஒன்று கூறுகிறோம்.

**மாணவர்களே, மக்களே, வெகுஜன அமைப்புக்களே. விடுதலைஇயக்கங்களே, எமது தேசத்தின் விடுதலைப்போராட்டம் எவருக்குமான சுதந்திரத்தை உத்தரவாதப்படுத்தும் ஒரு போராட்டமாக அமையவேண்டும் என்பதே எமது விருப்பம். இதற்குள் எமது போராட்டம் விடுதலைப்போராட்டத்தை வலுப்படுத்தும் போராட்டத்துள் ஒரு போராட்டம். விஜிதரன் விடுவிக்கப்படும் வரை தமிழீழ வீதிகள் தோறும் கிராமங்கள் தோறும் வீரியமுடன் எமது போராட்டம் தொடரும்.**

**படிப்பதற்காகப் போராடுவோம்!**
**போராடுவதற்காகப் படிப்போம்!!**

—யாழ். பல்கலைக்கழக மாணவர்கள்—